திரு. கே. சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, திருச்சி நகரில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது குறித்து 41-வது விதியின் கீழ் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அந்தக் கேள்வியைப் படித்தேன். ஆவன செய்யப்படும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, காரைமடை பகுதியில் ஒரு பிரசித்தி பெற்ற சந்தை இருக்கிறது. அந்தச் சந்தையில் இருந்துதான் நீலகிரி மாவட்டத்திற்கு காய்கறிகள் செல்லவேண்டும். அப்பேர்ப்பட்ட சந்தை 2 அல்லது 3 வாரங்களாக மூடிக்கிடக்கின்றது. அதைப்பற்றி சர்வக் கட்சியைச் சார்ந்தவர்கள் அரசுக்குத் தெரிவித்துள்ளார்கள். நான் 41-வது விதியின் கீழ் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு பதில் கிடைத்தவுடன் அது அச்சடித்து தங்களுக்கு அனுப்பப்படும்.

திரு. கே. சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஒரு குறுகிய கால வினா நான் கொடுத்திருந்தேன். ராணுவத்தில் இருந்து ஓய்வுப் பெற்றவர்களுக்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசும் மாநில அரசும்ஒரு ஆணை பிறப்பித்து இருப்பதாக நான் அறிகிறேன். அமைச்சர் அவர்களும் அதைப் பற்றிக் கவனிப்பதாகச் சொன்னார்கள். இன்றுவரை அவர்களிடமிருந்து பதில் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் வந்தவுடன். அச்சிட்டு உங்களுக்கு அனுப்பப்படும்.

5. அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) நகர்ப்புற நிலவரிச் சட்ட திருத்தம் குறித்து

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1-வது பிரிவில் (2) உட்பிரிவைச் சேர்ந்த (b) பகுதியைச் சேர்ந்த வெளியிடப்பட விருக்கும் கீழ்க்காணும் வரைவு அறிவிப்பிற்கு மேற்படி பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்படலாம் .''

1979 ஏப்ரல் 30] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

வரைவு அறிவிப்பு

தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1-வது பிரிவைச் சார்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், இந்த அறிவிப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து மேற் சொன்ன சட்டம், ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையில் 29—11—1978 அன்று வெளியாகி 29—11—1978-ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ், பாகம் II—பிரிவு 2-ல் 670-வது பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II (2)/RUL/6291/78-ஆம் எண் அறிவிப்பின்படி, கோயம்புத்தூர் நகராட்சியின் அதிகார வரம்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிட்ட பகுதிகளில் செயலுக்கு வரத் தொடங்கும் என்று இதனால் கட்டளை யிடுகிறார்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

(ஆ) மைய அரசின் வணிக அமைச்சகம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை திருத்த கோரியுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது குறித்து.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஏற்றுமதி செய்யப்படக்கூடிய பொருள்களின் மீது மாநில அரசுகள் வாங்கும் வரி/விற்பனை வரி விதிப்பதை கடுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்குடன், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினைத் திருத்த, இந்திய அரசின் வணிக அமைச்சகம் கோரியுள்ளதாக இந்தப் பேரவைக்குத் தெரிய வருகிறது. மேற்கூறிய கோரிக்கைக்கு இணங்க அரசியலமைப்புச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டால், மாநில அரசின் வருவாய் அளவும், கூட்டாட்சி நிதியமைப்பின் கீழுள்ள மாநில அரசுகளின் வரிவிதிக்கும் அதிகார வரம்பும் பெருமள விற்குப் பாதிக்கப்படுமாதலால், இது குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த கவலையினைத் தெரிவிப்பதோடு, இந்திய அரசின் வணிக அமைச்சகம் கோரியுள்ள அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தினை மேற்கொள்ள வேண்டாம் என்று இந்திய அரசினை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது''.